சார்பு நீதிமன்றம், பொள்ளாச்சி

அசல் வழக்கு எண். 309/2023

**PW2 – ஈஸ்வர மூர்த்தி** **18.04.2026**

<u>சாட்சி சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

நான் என்ன படித்துள்ளேன் என்று கேட்டால் 12ம் வகுப்பு படிததுள்ளேன். நான் என்ன தொழில் செய்து வருகிறேன் என்று கேட்டால் தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகத்தில் பொள்ளாச்சி–3 ல் நடத்துநராக பணியாற்றி வருகிறேன். நானும், வாதியும், முருகானந்தமும் ஒரே பேருந்து டெப்போவில் பணியாற்றி வருகிறோம் என்றால் சரியல்ல. எனது முதல் விசாரணையில் பிரதிவாதியை தெரியும் என்று கூறிய நிலையில் அவர் எவ்வாறு தெரியும் என்று கேட்டால் வாதியின் வீட்டிற்கு நான் சென்றபோது பிரதிவாதியை தெரிந்துகொண்டேன். நான் வாதியின் வீட்டிற்கு எதற்காக சென்றேன் என்று கேட்டால் சொந்த வேலையின் காரணமாக வாதியை பார்க்க சென்றேன். வாதி, பிரதிவாதிக்கு ரூ.7,00,000/–த்தை என் முன்னால் தான் கொடுத்தார். எத்தனை ரூபாய் நோட்டுகட்டுக்கள் கொடுத்தார் என்று கேட்டால் 500 ரூபாய் நோட்டு கட்டுகள் 14 கொடுத்தார். மந்தராச்சலமூர்த்தி அப்போது இருந்தாரா என்றால் இருந்தார். அவர்தான் பணத்தை வாங்கினார். பிராமிசரி நோட்டை நான் தான் எழுதினேனா என்றால் ஆமாம், பிராமிசரி நோட்டை எந்த பேனாவில் எழுதினேன் என்று கேட்டால் பால்பாயின்ட் பேனாவில் எழுதினேன். பிராமிசரி நோட்டில் சாட்சி ரங்கநாயகி கையெழுத்து போட்டாரா என்றால் போட்டார். நான் எழுதிய பேனாவில்தான் அவரும் கையெழுத்து இட்டாரா என்றால் ஆமாம். நான் சொல்வது தவறு என்றும் நான் எழுதிய பேனாவும் சாட்சி எழுதிய பேனாவும் வெவ்வேறு என்றும் தற்போது பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் சொன்ன தேதியில் சொன்ன நேரத்தில் பிரதிவாதி, வாதியிடம் எந்த பணத்தையும் வாங்கவில்லை என்றும் அந்த நேரத்தில் அவர் கோயமுத்தூரில் இருந்தார்

என்றும் நான் வாதிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. பணம் கொடுத்ததாக சொல்லும் நாளில் பிரதிவாதி கோயமுத்தூர் கவுண்டம்பாளையத்தில் புதுவீட்டில் பால் காய்ச்சுவதற்காக இருந்தார் என்றும் நான் வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. நானும், வாதியும், முருகானந்தமும் ஒரே இடத்தில் பணிபுரிந்த காரணத்தினால் நான் வாதிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இன்றைக்கு நான் விடுமுறை எடுத்துதான் நீதிமன்றத்திற்கு வந்துள்ளேன். ரூ.7,00,000/– கொடுத்ததற்கு பிராமிசரி நோட்டை தவிர வேறு ஆவணம் வாங்கப்பட்டதா என்றால் வாங்கபடவில்லை. பிரதிவாதி முருகானந்தனிடம் தான் பணம் வாங்கி இருந்தார் என்றும் அதை கட்டிவிட்டார் என்றும் பிரதிவாதியிடம் பணம் பறிப்பதற்காக நானும் வாதியும் சேர்ந்து பொய்வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. முருகானந்தத்திடம் பிரதிவாதி அவரது மனைவியின் சொத்தை பொறுத்த ஆவணத்தை கொடுத்துள்ளார் என்று சொன்னால் அது சரியல்ல, வாதியிடம் தான் கொடுக்கப்பட்டது. நான் முதல் நிலை சாட்சியத்தில் கோரியவாறு சொன்ன நேரத்தில் சொன்ன இடத்தில் வாதி, பிரதிவாதிக்கு பணம் எதுவும் கொடுக்கவில்லை என்றும் நான் வாதிக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

இச்சாட்சியம் என் முன்பு நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அது சரி என்று அவரால் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

சார்பு நீதிபதி
பொள்ளாச்சி